**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 215 நாள்: 17.06.2026

**பசுமை நிறைந்த சீர்மிகு நகரமாக சென்னையை உருவாக்கும் வகையில் நீலாங்கரை கிழக்குக் கடற்கரைச் சாலையின் சாலை மையத் தடுப்புகளில் செடிகள் மற்றும் மரக்கன்றுகள் நடும் பணியினை தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பசுமை நிறைந்த சீர்மிகு நகரமாக சென்னையை உருவாக்கும் பணி மாநகராட்சி சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக இன்று (17.06.2026) தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், சோழிங்கநல்லூர் மண்டலத்தில், வார்டு-192க்குட்பட்ட நீலாங்கரை கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள சாலை மையத் தடுப்புகளில் பூச்செடிகள் மற்றும் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்து அவற்றை முறையாக பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் திடீரென ஏற்படும் தீயினைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு-198க்குட்பட்ட தேவராஜ் நகர் பூங்காவில் பசுமைப் பரப்பை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்டு வரும் செடிகள் மற்றும் மரக்கன்றுகள் நடும் பணியினையும், வார்டு-192க்குட்பட்ட நீலாங்கரை கடற்கரை மணற்பரப்பில் இயந்திரங்கள் மற்றும் பணியாளர்கள் மூலம் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்படுவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின் போது, தலைமைப் பொறியாளர் (தெற்கு) திரு.ஆர்.முரளி, மண்டல அலுவலர் திரு.திருநாவுக்கரசு, மண்டல நல அலுவலர், உதவி செயற்பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள், சுகாதார அலுவலர், பூங்கா கண்காணிப்பாளர் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**